## Smittestopp **என்றால் என்ன**?

Smittestopp என்பது நார்வேஜியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் பப்ளிக் ஹெல்த் வழங்கும் ஒரு செயலியாகும்.சமூகத்தில் கொரோனா வைரஸின் பரவலைத் தடுக்கும் நோக்கத்தில் வடிவமைக்கப்பட்டது. அதைப் பயன்படுத்தலாமா வேண்டாமா என்பதை நீங்களே தேர்வு செய்யலாம்.
நீங்கள் பரிசோதனை செய்து கொரோனா வைரஸ் இருப்பது உறுதி செய்யப்பட்டால், இந்த செயலியின் வாயிலாக பிறருக்குத் தெரியப்படுத்தலாம். தொற்றிற்கு உட்பத்தப்பட்டிருக்கலாம் என்பதையும் அதற்கான அறிவுரைகளையும் அவர்கள் பெறுவார்கள். இதன் மூலம், அதிகமான மக்கள் நோய்வாய்ப்படுவதை இந்தச் செயலி தடுக்கிறது. நீங்கள் பாதிக்கப்பட்டிருப்பதை இந்தச் செயலி வேறு யாருக்கும் தெரியப்படுத்தாது.

## Smittestopp **செயலியை எனது ஃபோனில் பெறுவது எப்படி**?

- App Store or Google Play இல் இருந்து செயலியைப் பதிவிறக்கம் செய்யலாம்.
- செயலியில், ஸ்க்ரீனில் தெரியும் வழிமுறைகளைப் பின்தொடருங்கள்.
- எழுதி இருப்பது உங்களுக்குப் புரியவில்லை என்றால், அதனை விளக்கும்படி யாரிடமாவது கேளுங்கள்.

## Smittestopp **செயலி எவ்வாறு செயல்படுகிறது**?

ஃபோனில் செயலியை நிறுவிய வேறு யாரேனும் உங்கள் அருகில் இருந்தால், ஃபோன்கள் ஒன்றிற்கு ஒன்று சிக்னலை அனுப்பும்

வேறு நபருக்கு கொரோனா வைரஸ் உறுதிப்படுத்தபட்டிருந்தால், இந்தச் செயலி உங்கள் ஃபோன் பாதிக்கப்பட்ட நபருக்கு அருகில் இருப்பதை உங்களுக்கு நினைவூட்டும். பின்னர் நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பதை தெரிவிக்கும்படி இந்தச் செயலி மூலமாக உங்களுக்கு ஒரு மெசேஜ் அனுப்பப்படும். நீங்கள் பாதிக்கப்படிருந்தால் அதனைப் பிறருக்கு அறிவிக்கலாமா என்பதையும் நீங்களே முடிவு செய்யலாம்.

செயலியின் மூலமாக நீங்கள் மெசேஜைப் பெற்றால், தொற்றிற்கு உட்படுத்தப்பட்டுள்ளீர்கள் என்பதை மட்டுமே அறிந்து கொள்வீர்களே தவிர, யார் எங்கே பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அறிய முடியாது. அரசு அதிகாரிகளும் சரி, தனிப்பட்ட நபர்களும் சரி, நீங்கள் யார் என்பதையோ எங்கிருந்து வருகிறீர்கள் என்பதையோ கண்டறிய முடியாது.

## தனியுரிமை

- Smittestoppஐப் பயன்படுத்த 16 வயதை நிறைவு செய்திருக்க வேண்டும்.
- 14 நாட்களுக்குப் பின், நீங்கள் ஏதும் செய்ய வேண்டிய அவசியம் இல்லாமலே, உங்களைப் பற்றிய தரவு நீக்கப்படும்.
- உங்களைப் பற்றிய தரவை செயலியில் இருந்து எந்த நேரத்திலும் நீக்கலாம்.
- எந்த நேரத்திலும் செயலியை நீங்கள் நீக்கலாம்.

# தினசரி வாழ்வைத் திரும்பக் கொண்டு வருவதற்கு இணைந்திடுங்கள்

FHI Folkehelseinstituttet

helsenorge.no/smittestopp

Smittestopp